# மேன்மைமிகு மன்றத் திட்டம்

மேன்மைமிகு மன்றமாக இருப்பது எப்படி




TOASTMASTERS
INTERNATIONAL



**Toastmasters International (டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல்)**
toastmasters.org

© 2020 Toastmasters International. எல்லா உரிமைகளும் காக்கப்பட்டுள்ளன Toastmasters International, Toastmasters International இலட்சினை, Toastmasters International வணிகச்சின்னங்கள் மற்றும் பதிப்புரிமைகள் Toastmasters International நிறுவனத்தின் தனி உடைமை ஆகும். இவற்றை அனுமதியுடன் மட்டுமே பயன்படுத்தலாம்.

உருப்படி ta-HI1111 Rev. 03/2025

# உள்ளடக்க அட்டவணை


**பணிகள், மதிப்புகள் மற்றும் வாக்குறுதிகள்** ........ **3**

**மேன்மைமிகு மன்றத் திட்டத்தில் வெற்றியின் அடித்தளம்** ........ **4**

**மேன்மைமிகு மன்றத் திட்டம்** ........ **5**

**அது எவ்வாறு செயல்படுகிறது** ........ **5**

தகுதிக்கான தேவைகள் ........ 5

அடையவேண்டிய குறிக்கோள்கள் ........ 6

**சொல்லாக்கம் மற்றும் திட்ட விவரக்குறிப்புகள்** ........ **10**

உறுப்பினர்கள் தளம் ........ 10

ஆண்டு முடிவில் உறுப்பினர்கள் ........ 10

நிகர வளர்ச்சி ........ 11

உலகத் தலைமையகத்திற்கு தகவலைச் சமர்ப்பித்தல் ........ 11

**புதிதாக சாசனம் செய்யப்பட்ட மன்றங்கள்** ........ **11**

**அறிக்கைகள்** ........ **12**

**மன்ற வெற்றித் திட்டம்** ........ **12**

**மாவட்ட அங்கீகாரத் திட்டம்** ........ **13**

**பகுதி இயக்குனரின் மன்ற வருகைகள்** ........ **14**

**மன்ற வளங்கள்** ........ **14**

**மேன்மைமிகு மன்றத் திட்ட இலக்குகள்** ........ **15**

# பணிகள், மதிப்புகள் மற்றும் வாக்குறுதிகள்

## Toastmasters International குறிக்கோள்

நாங்கள் தனிநபர்கள், இன்னும் சிறந்த தொடர்பாளர்கள் மற்றும் தலைவர்களாக மாறுவதற்கான அதிகாரத்தை அளிக்கிறோம்.

## மாவட்ட இலக்கு

நாங்கள் புதிய மன்றங்களைக் கட்டமைக்கிறோம் மற்றும் அனைத்து மன்றங்களும் சிறப்பினை அடைய ஆதரவளிக்கிறோம்.

## மன்ற இலக்கு

நாங்கள் ஒரு ஆதரவான மற்றும் நேர்மறை கற்றல் அனுபவத்தை வழங்குகிறோம், இதில் உறுப்பினர்கள் தொடர்பாடல் மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்க்க அதிகாரமளிக்கப்படுகிறார்கள், விளைவாக உயர்ந்த தன்னம்பிக்கை மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியைப் பெறுகிறார்கள்.

## Toastmasters International மைய விழுமியங்கள்

- நேர்மை
- மரியாதை
- சேவை
- சிறப்பு

## Toastmasters International பிராண்ட் வாக்குறுதி

தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சி மூலம் தனிநபர்களுக்கு ஆற்றல் அளித்தல்.

இது Toastmasters International மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கும் வாக்குறுதி ஆகும். நாங்கள் உலகம் முழுவதிலும் உள்ள மன்றங்களில் தொடர்ச்சியாக இந்த இலக்கை அடைந்த பின், நாங்கள் மன்றச் சிறப்பினை அடைந்திருப்போம்.

## ஒரு சொல்வேந்தரின் வாக்குறுதி

Toastmasters International மற்றும் எனது மன்றத்தின் ஒரு உறுப்பினராக, நான் வாக்குறுதியளிக்கிறேன்

- மன்றக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ள
- எனது எல்லா திட்டங்களையும் எனது இயலுமைக்குச் சிறந்த வகையில், Toastmasters கல்வித் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்க
- கூட்டப் பணிகளுக்கு ஆயத்தம் செய்ய மற்றும் அவற்றை நிறைவேற்ற
- சக உறுப்பினர்களுக்கு பயனுள்ள ஆக்கப்பூர்வமான மதிப்பீடுகளை வழங்க
- அனைத்து உறுப்பினர்களும் கற்று வளரத் தேவையான நேர்மறையான, நட்பான சூழலை மன்றம் பராமரிக்க உதவ
- அழைக்கப்படும் போது, ஒரு அதிகாரியாக என் மன்றத்தில் சேவை செய்ய
- என் சக மன்ற உறுப்பினர்கள் மற்றும் எங்கள் விருந்தினர்களை மரியாதை மற்றும் கண்ணியத்தோடு நடத்த
- Toastmasters உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நன்மைகளைப் பார்ப்பதற்காக மன்றக் கூட்டங்களுக்கு விருந்தினர்களை அழைத்து வர
- எல்லா Toastmasters கல்வி மற்றும் அங்கீகாரத் திட்டங்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளைப் பின்பற்ற
- அனைத்து Toastmasters நடவடிக்கைகளிலும் நடக்கும் சமயத்தில் நம்பகத்தன்மை, மரியாதை, சேவை மற்றும் சிறப்பு ஆகிய Toastmasters-இன் முக்கிய மதிப்புகளுக்கு உட்பட்டு செயல்பட

# மேன்மைமிகு மன்றத் திட்டத்தில் வெற்றியின் அடித்தளம்

உயர்தரமான மன்றங்கள் உறுப்பினர்களின் அனுபவத்தை மேம்படுத்துகின்றன. அந்த மன்றங்கள் உறுப்பினரின் சாதனைகளை ஊக்குவித்துக் கொண்டாடுகின்றன, ஆதரவளித்து மகிழ்ந்தனுபவிக்கும் சூழலை வழங்குகின்றன; மேலும் பலவகைத் தன்மையுடன் தொழில்முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டத்தை வழங்குகின்றன. அந்த மன்றங்களில், உறுப்பினர்களுக்கு முறையான மதியுரைஞர் திட்டத்திற்கு வாய்ப்பு இருப்பதை உறுதி செய்வதற்காக, மன்றத் தரத்தின் அனைத்து அம்சங்களிலும் அதிகாரிகள் பயிற்சியளிக்கப்படுகிறார்கள், அவர்கள் வளர உதவும் மதிப்பீடுகளைப் பெறுகிறார்கள், மேலும் அவர்களின் இலக்குகளை அடைய ஊக்கம் பெறுகிறார்கள்.

மன்றங்களின் முதல் நோக்கம், சிறந்த உறுப்பினர் அனுபவத்தை வழங்குவதாகும். இதன்மூலம் தற்போதைய உறுப்பினர்கள் தக்கவைக்கப்பட்டு புதிய உறுப்பினர்கள் சேர்கிறார்கள். உங்கள் மன்றத்தில் சிறந்த உறுப்பினர் அனுபவத்தை எவ்வாறு உருவாக்க முடியும்? முதன்முதலில் பெறுகின்ற கருத்துப்பதிவுகள் முக்கியமானவை. உங்கள் மன்றத்துடனான ஒவ்வொரு புதிய மற்றும் வருங்கால உறுப்பினரின் ஆரம்ப ஊடாடுதல் ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டும். **உண்மையின் தருணங்கள்** ஆக ஆரம்ப கருத்துப்பதிவுகள் உருவாக்கப்படும் காலத்தை Toastmasters வரையறுக்கிறது.

| உண்மையின் தருணங்கள் | |
|---|---|
| **முதல் கருத்துப்பதிவுகள்** | விருந்தினர்களின் அனுபவங்களும் அவதானிப்புகளும் அவர்களைத் திரும்பி வர ஊக்குவிக்கும் முதன்முதல் கருத்துப்பதிவுகளாவதை உங்கள் மன்றம் உறுதி செய்கிறது. |
| **உறுப்பினர் தொடக்கப் பயிற்சி** | உறுப்பினர் தொடக்கப் பயிற்சி Toastmaster கல்வி மற்றும் அங்கீகாரத் திட்டங்கள், உங்கள் மன்றத்திற்கான அவர்களின் பொறுப்பு, அவர்கள் மீதான உங்கள் மன்றத்தின் பொறுப்பு ஆகியவற்றை உங்கள் மன்றம் புதிய உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. |
| **தோழைமை, வகை, மற்றும் தொடர்பாடல்** | உங்கள் மன்றம் ஒரு சுவாரஸ்யமான, நட்பான மற்றும் ஆதரவான சூழலை வழங்குகிறது, இது குதூகலமான கற்றலை ஊக்குவிக்கிறது. |
| **நிகழ்ச்சி திட்டமிடல் மற்றும் கூட்ட அமைப்பு** | உங்கள் மன்றக் கூட்டங்கள் ஆயத்தமாக உள்ள பேச்சாளர்கள் மற்றும் பயனுள்ள மதிப்பீடுகளுடன் கவனமாக திட்டமிடப்பட்டுள்ளன. |
| **உறுப்பினர் எண்ணிக்கை** | உங்கள் மன்றத்தில் தலைமைத்துவத்தை வழங்கவும், கூட்டம் மற்றும் குழு பணிகளை நிரப்பவும் போதுமான உறுப்பினர்கள் உள்ளனர். உங்கள் மன்றம்உறுப்பினர்-கட்டமைப்பு மற்றும் தக்கவைப்பு நடைமுறைகளில் பங்கேற்கிறது. |
| **சாதனைகளை அங்கீகரித்தல்** | உங்கள் மன்றம் உறுப்பினர்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவதை கண்காணிக்கிறது, பூர்த்தி செய்யப்பட்ட விருது விண்ணப்பங்களை உடனடியாக சமர்ப்பிக்கிறது மற்றும் உறுப்பினர் சாதனையை தொடர்ந்து அங்கீகரிக்கிறது. |

செயல்படுத்தப்படும்போது, டோஸ்ட்மாஸ்டர்களின் நோக்கம் மற்றும் முக்கிய மதிப்புகளை உணர்ந்து கொள்வதற்கான பாதை வரைபடத்தை **உண்மையின் தருணங்கள்** உருவாக்குகிறது. வெற்றிகரமான மன்றங்களை மேன்மிக்கவைகளாக மாற்றும் வெற்றி மற்றும் தனித்தன்மைக்கான முக்கியமான கூறுகளை இது எடுத்துக்காட்டுகிறது. மேன்மைமிகு மன்றங்களே பின்னர் மேன்மைமிகு பகுதிகள், கோட்டங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அடிப்படையாகும்.

**உண்மையின் தருணங்கள்** தரமான சேவை மற்றும் சிறந்த உறுப்பினர் அனுபவத்தை வழங்குவதில் உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கட்டும்.

கூடுதலான ஆதரவு தேவையெனில், வழிகாட்டுதலுக்கு உங்கள் மாவட்டத் தலைவர்களை அணுகவும். உங்கள் மன்றம் தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால், நீங்கள் மன்ற பயிற்சியாளர் அல்லது பயிற்சியாளர்களைப் பெறத் தகுதி பெறலாம், அவர்கள் மன்றத்துடன் இணைந்து பணியாற்றி மேன்மைமிகு அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக மாற உதவும். மேன்மைமிகு மன்றத் திட்டமானது, மன்றங்களுக்கு மெருகேறிப் பிரகாசிக்கும் திறனை அளிக்கிறது, இந்த முயற்சியில் உங்கள் மன்றத்தை ஆதரிக்க உங்கள் மாவட்டத் தலைவர்கள் உள்ளனர்.

# மேன்மைமிகு மன்றத் திட்டம்

மேன்மைமிகு மன்றத் திட்டம் (DCP) உங்கள் மன்றம் ஒவ்வொரு வருடமும் அடைய முயற்சிக்க வேண்டிய 10 இலக்குகளை உள்ளடக்கியது. உங்கள் மன்றம் ஒவ்வொரு கூட்டத்திலும் **உண்மையின் தருணங்கள்** -ஐ ஒருங்கிணைக்கும் சமயம், இந்த வருடாந்திர இலக்குகளை அடைவதற்கான பாதையில் தன்னியக்கமாகப் பயணிக்கிறது.

உங்கள் வசதிக்காக இந்த 10 இலக்குகளும் நான்கு வகைப்பாடுகளாகக் குழுவாக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| **கல்வி** | கல்வி விருதுகள் ஈட்டும் வாய்ப்புள்ள உறுப்பினர்கள் அவர்கள் இலக்குகளை அடைகின்றனர். |
| **உறுப்பினர்நிலை** | புதிய, இரட்டை மற்றும் மீண்டும் சேர்க்கப்படும் உறுப்பினர்கள் சேரும்போது, அனைவரின் அனுபவமும் மேம்படுகிறது, ஏனெனில் உங்கள் மன்றத்தில் தலைமைத்துவத்தை வழங்கவும், கூட்ட பங்குகள் மற்றும் குழுப் பணிகளை நிரப்பவும் போதுமான உறுப்பினர்கள் உள்ளனர். |
| **பயிற்சி** | பயிற்சி: பயிற்சியளிக்கப்பட்ட மன்ற அதிகாரிகள் உங்கள் மன்றத்திற்குச் சிறப்பாகச் சேவை செய்யவும் ஆதரிக்கவும் முடியும், ஏனெனில் அவர்களுக்கு அவர்களின் பங்குகளை எவ்வாறு சிறப்பாக நிறைவேற்றுவது என்பது தெரியும். |
| **நிர்வாகம்** | செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள், புதுப்பிப்புகள் மற்றும் மன்ற அதிகாரிப் பட்டியலைச் சரியான நேரத்தில் சமர்ப்பித்தல் ஆகியவை உங்கள் மன்றம் மிகவும் சீராக இயங்க உதவும். இது உங்கள் உறுப்பினர்களுக்குப் பயனளிக்கும். |

## அது எவ்வாறு செயல்படுகிறது

மேன்மைமிகு மன்றத் திட்டமானது ஜூலை 1 முதல் ஜூன் 30 வரை இயங்கும் வருடாந்திர திட்டமாகும். இந்த **மன்ற வெற்றித் திட்டத்தை** உங்கள் வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் மன்றம் அடைவதற்கான 10 இலக்குகள் உள்ளன. ஆண்டு முழுவதும் இந்த இலக்குகளை நோக்கிய உங்கள் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, புதுப்பிக்கப்பட்ட அறிக்கைகள் Toastmasters International இணையத்தளத்தின் **dashboards.toastmasters.org** இல் தினந்தோறும் வெளியிடப்படுகின்றன. ஆண்டு முடிவில், மன்றம் அடைந்துள்ள இலக்குகளின் எண்ணிக்கைகள் கணக்கிடப்படுகின்றன. அடையப்பட்ட இலக்குகளின் அடிப்படையில் மற்றும் தகுதிகாண் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதா இல்லையா என்பதன் மூலம், மன்றம் ஒரு மேன்மைமிகு, தேர்வுறு மேன்மைமிகு அல்லது தலைவரின் மேன்மைமிகு அல்லது ஸ்மெட்லி மேன்மைமிகு என அங்கீகரிக்கப்படலாம்.

### தகுதிக்கான தேவைகள்

ஒரு தகுதிக்கான தேவை என்பது திட்டத்தில் பங்கேற்பதற்கான முற்படுதேவை அல்லது முன்கூட்டிய நிபந்தனையாகும்.

அங்கீகாரத்திற்குத் தகுதிபெற, ஒரு மன்றம் பின்வரும் மூன்று தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

1. **Policy 2.0: Club and Membership Eligibility, Section 4: Good Standing of Clubs**-க்கு இணங்க ஒரு மன்றம் நல்ல நிலையில் இருக்க வேண்டும்.

2. ஜூன் 30 ஆம் தேதி நிலவரப்படி ஒரு மன்றத்தில் 20 உறுப்பினர்கள் அல்லது உறுப்பினர்களின் நிகர வளர்ச்சி குறைந்தது மூன்று புதிய, இருமடங்கு அல்லது மீண்டும் சேர்க்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும்.

3. மன்ற வெற்றித் திட்டத்தை செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் மன்றம் சமர்ப்பிக்க வேண்டும்.

எந்தவொரு தகுதிகாண் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால், உங்கள் மன்றம் அனைத்து மேன்மைமிகு திட்ட இலக்குகளை பூர்த்தி செய்தாலும்கூட, மேன்மைமிகு அங்கீகாரத்தைப் பெற முடியாது. இன்றைய தேதி வரையிலான உறுப்பினர் நிலை என்பது ஒரு தனிப்பட்ட மன்றத்தின் கட்டணம் செலுத்திய உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கிறது. இந்த எண்ணிக்கை மன்றப் பட்டியலில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் பொருந்துகிறது. உறுப்பினர்கள் ஒரு மன்றத்தில் இருந்து இன்னொரு மன்றத்திற்கு மாறும்போது இது பொருந்தாது. ஒரு உறுப்பினர் வேறு மன்றத்துக்கு மாறினால், அவர்களின் தாய் மன்றம் அடுத்த புதுப்பித்தல் சுழற்சி வரை அவர்களின் உறுப்பினர்களுக்கான புள்ளியைத் தக்க வைத்துக் கொள்ளும். இடமாறிய மற்றும் கௌரவ உறுப்பினர்கள் தகுதிகாண் தேவையின் எண்ணிக்கைக்கு கணக்கில் கொள்ளப்படுவதில்லை.

உங்கள் மன்றம் ஆண்டு முழுவதும் பல புதிய உறுப்பினர்களைப் பெறக்கூடும் என்றாலும், புதுப்பிக்காத உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின், உங்கள் மன்றம் அங்கீகாரத்திற்குத் தகுதியற்றதாக இருக்கலாம். மேன்மைமிகு செயற்பாட்டு அறிக்கையானது, ஒவ்வொரு தனி மன்றத்திற்கும் இந்தத் தகுதிபெறும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களின் அடிப்படை எண்ணிக்கையைக் காட்டும்.

## மன்றத்தின் சிறப்புமிக்க திட்ட இலக்குகள்

ஓர் எளிய **ஒருபக்கத் திட்டச் சுருக்கம்** இந்தக் கையேட்டின் இறுதியில் தரப்பட்டுள்ளது. மன்றத்தின் சிறப்புமிக்க திட்ட இலக்குகளை உங்கள் மன்றம் எவ்வாறு அடையமுடியும் என்பது பற்றிய விரிவான தகவல்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

### கல்வி

இலக்குகள் 1 முதல் 6 கல்வி விருதுகள் மீது கவனம் செலுத்துகின்றன. உறுப்பினர்கள் தங்கள் கல்வி இலக்குகளை அடைய வாய்ப்பு கிடைக்கும்போது, அவர்கள் Toastmasters அனுபவத்திலிருந்து பயனடைகிறார்கள், மேலும் சிறந்த பேச்சாளர்களாகவும் தலைவர்களாகவும் மாறுகிறார்கள்.

1. நான்கு நிலை 1 விருதுகள் அடையப்பட்டன
2. இரண்டு நிலை 2 விருதுகள் அடையப்பட்டன
3. மேலும் இரண்டு நிலை 2 விருதுகள் அடையப்பட்டன
4. இரண்டு நிலை 3 விருதுகள் அடையப்பட்டன
5. மேலும் நிலை 4 பாதை நிறைவு விருது ஒன்று அல்லது DTM விருது அடையப்பட்டன
6. மேலும் நிலை 4 பாதை நிறைவுறுதல் விருது ஒன்று அல்லது DTM விருது அடையப்பட்டன

நன்னிலை உறுப்பினர்கள் மட்டுமே கல்வி விருது பெற தகுதியுடைவர்கள். ஒரு நன்னிலை உறுப்பினரின் தற்போதைய கட்டணக் காலத்திற்கான கட்டணம் உலக தலைமையகத்திற்கு செலுத்தப்பட்டு மற்றும் அவர்களால் பெறப்பட்டிருக்க வேண்டும் **Policy 2.0: Club and Membership Eligibility, Section 5.** அனைத்து விருது விண்ணப்பங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் மற்றும் உலகத் தலைமையகத்தால் ஜூன் 30 அன்று அல்லது அதற்கு முன்பு பெறப்பட்டிருக்க வேண்டும்.

கல்வி அங்கீகாரத்திற்குத் தகுதி பெறும் உருப்படிகளின் முழுமையான பட்டியலுக்கு, **toastmasters.org/Education/Education-Programs-FAQ** இல் கல்வித் திட்ட அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் பார்க்கவும்.

**உங்கள் மன்றம் ஒரு உறுப்பினருக்கு ஆண்டுக்கு ஒரு வகை கல்வி விருதுக்கு மட்டுமே புள்ளியைப் பெறுகிறது. இது ஒரு சிலரை மட்டுமல்லாமல், கல்வித் திட்டத்தில் முன்னேற அனைத்து உறுப்பினர்களையும் ஊக்குவிக்கிறது.**

உதாரணம்:

- பேட் ஸ்மித் ஜூலை மாதத்தில் விளக்கவுரை வழங்குதலில் திறன்பெறல் நிலை 1 விருதைப் பெறுகிறார். மன்றம் இந்தச் சாதனைக்காக இலக்கு 1 நோக்கிய நகர்விற்காக வெற்றிப்புள்ளிகளைப் பெறும்.
- ஆண்டின் பிற்பகுதியில், பேட் விளக்கவுரை வழங்குதலில் திறன்பெறலில் 2 ஆம் நிலையைப் பெறுகிறார். மன்றம் இந்தச் சாதனைக்காக இலக்கு இரண்டிற்கான புள்ளிகளைப் பெறும்.
- அதே Toastmasters திட்ட ஆண்டில், பேட் இரண்டாம் முறை நிலை 1 மற்றும் நிலை 2 விருதுகளை சக்தி வாய்ந்த தலைமைத்துவப் பண்பிற்காகப் பெறுகிறார். இந்தக் கூடுதல் விருதுகளுக்காக, மன்றம் மேன்மைமிகு மன்ற இலக்குகளுக்குப் புள்ளிகளைப் பெறாது. ஏனென்றால் மன்றம் ஏற்கனவே பேட்டின் விளக்கவுரை வழங்குதலில் திறன்பெறல் நிலை 1 மற்றும் நிலை 2 க்கான அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது.

ஒரு விருதுக்கான புள்ளி ஒரே ஒரு மன்றத்துக்கு மட்டுமே வழங்கப்படலாம். ஒன்றுக்கு மேற்பட்ட மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், உலகத் தலைமையகத்திற்கு விருது வழங்கப்படும் முன்னர், எந்தவொரு விருதுக்கு எந்த மன்றம் புள்ளியைப் பெற வேண்டும் என்பதைத் தேர்வு செய்ய வேண்டும்.

### உறுப்பினர் நிலை

இலக்குகள் 7 மற்றும் 8 உறுப்பினர்களைக் கையாளுகின்றன. தரமான மன்றங்கள் கூட்டங்களை மாறுபட்டதாகவும் ஈர்க்கக்கூடியதாகவும் ஆக்க போதுமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. புதிய உறுப்பினர்கள் சேரும்போது, கூட்டங்கள் பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளன, மேலும் இயல்பான உறுப்பினர்கள் வருகைக் குறைவு ஈடுசெய்யப்படுகிறது. இது அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் மேம்பட்ட அனுபவத்தை அளிக்கிறது.

7. நான்கு புதிய, இரட்டை அல்லது மீண்டும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள்
8. மேலும் நான்கு புதிய, இரட்டை அல்லது மீண்டும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள்

Toastmasters ஆண்டில் நான்கு புதிய, இரட்டை அல்லது மீண்டும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் மன்றத்தில் சேரும்போது, உங்கள் மன்றம் இலக்கு 7 ஐ அடைகிறது. அந்த வருடத்தில் கூடுதலாக நான்கு புதிய, இரட்டை அல்லது மீண்டும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் சேரும்போது அது இலக்கு 8 ஐ அடைகிறது.

**Club Constitution, Article II: Membership, Section 2: Admission to Membership** இன் படி , உறுப்பினர் சேர்க்கையின்படி உங்கள் மன்றம் பூர்த்திசெய்யப்பட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட **உறுப்பினர் விண்ணப்பத்தை** உலகத் தலைமையகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும், அதனுடன் அந்த Toastmasters ஆண்டில் சேரும் ஒவ்வொரு புதிய, இரட்டை மற்றும் மீண்டும் சேர்க்கப்பட்ட உறுப்பினருக்கான உறுப்பினர் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும். உறுப்பினர் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான மிக விரைவான மற்றும் மிக எளிய வழி, அதை **Club Central** க்கு இணையத்தளம் வழியாகச் சமர்ப்பித்தலாகும்.

நடப்பு Toastmasters ஆண்டிற்கான மேன்மைமிகு மன்றத் திட்டத்தில் உங்கள் மன்றம் புள்ளிகளைப் பெற, உறுப்பினர் விண்ணப்பங்கள் மற்றும் உறுப்பினர் கட்டணங்கள் உலக தலைமையகத்திற்கு ஜூன் 30 ஆம் தேதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும். **(இடமாறிய மற்றும் கௌரவ உறுப்பினர்கள் உங்கள் மன்றத்தின் உறுப்பினர்நிலைக்கான இலக்கில் சேர்க்கப்படுவதில்லை).**

### பயிற்சி

இலக்கு 9 பயிற்சியின் மீது கவனம் செலுத்துகிறது. மன்ற அதிகாரிகள் அவர்கள் கடமைகளை ஆற்ற நன்கு பயிற்சி பெறும் போது, மன்ற உறுப்பினர்களுக்கு சிறப்பாக சேவை செய்ய முடிகிறது. இது உறுப்பினர் அனுபவத்தை மிகவும் நேர்மறையாக ஆக்குகிறது, இது உறுப்பினர் தக்கவைப்பை அதிகரிக்க வழிவகுக்கிறது.

9. இரண்டு பயிற்சி காலங்களிலும் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் நான்கு மன்ற அதிகாரிகள் பயிற்சி பெறுகின்றனர்.

தலைவர், உப தலைவர் கல்வி (VPE), உப தலைவர் உறுப்பினர் சேர்க்கை (VPM), உப தலைவர் மக்கள் தொடர்பு (VPPR), மன்றச் செயலாளர், மன்றப் பொருளாளர் மற்றும் அவைக் காவலர் போன்ற நான்கு அதிகாரிகளாவது மன்றத்தின் அதிகாரிப் பங்களிப்புகளில் பயிற்சி பெறும்போது உங்கள் மன்றம் இலக்கு 9-ஐ அடைகிறது. அதிகாரிகள் இரண்டு மாவட்டப் பயிற்சி அமர்வுகளுக்குச் சென்று முழுமையாகப் பங்கேற்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்குப் பதிலாக கலந்துகொள்ளும் அதிகாரிகள் அல்லாதவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படுவதில்லை, மேலும் ஒரு அதிகாரிப் பங்களிப்பிற்கு ஒரு நபருக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படுகிறது. அதிகாரிகளுக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

முதல் பயிற்சி அமர்வு ஜூன் 1 முதல் ஆகஸ்ட் 31 வரை மற்றும் இரண்டாவது நவம்பர் 1 முதல் பிப்ரவரி 28 வரை நிகழ்கின்றன (அல்லது பிப்ரவரி 29 லீப் வருடங்களில்). செப்டம்பர் 30 மற்றும் மார்ச் 31 க்குள் முறையே மாவட்ட மையங்கள் மூலம் பயிற்சி அறிக்கைகளை இணையம் மூலம் சமர்ப்பிக்க மாவட்டங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

புதிதாகச் சாசனம் பெற்ற மன்றங்களுக்கு, இலக்கு 9-க்குப் பின்வரும் பயிற்சி தேவைகள் பொருந்தும்:

| சாசனத் தேதி | பயிற்சி அமர்வு 1 (ஜுன்1 -ஆகஸ்ட் 31) | பயிற்சி அமர்வு 2 (நவம்பர் 1 -பிப்ரவரி 28/29) |
|---|---|---|
| ஜூலை 1- ஆகஸ்ட் 31 | குறைந்தபட்சம் நான்கு மன்ற அதிகாரிப் பங்குகள் மாவட்டத்தால் வழங்கப்படும் முதல் பயிற்சி அமர்வில் கலந்து கொள்ள வேண்டும். | குறைந்தபட்சம் நான்கு மன்ற அதிகாரிகள் மாவட்டத்தால் வழங்கப்படும் இரண்டாவது பயிற்சி அமர்வில் கலந்து கொள்ள வேண்டும். |
| செப்டம்பர் 1 - பிப்ரவரி 28/29 | பயிற்சி அமர்வு 2 நெடுவரிசையைப் பார்க்கவும் → | மாவட்டத்தால் வழங்கப்படும் இரண்டாவது பயிற்சி அமர்வில் குறைந்தபட்சம் நான்கு மன்ற அதிகாரிகள் கலந்து கொள்ளும்போது, மன்றம் முதல் மற்றும் இரண்டாவது பயிற்சி அமர்வுகளுக்கான புள்ளிகளைப் பெறுகிறது. |
| மார்ச் 1 - ஜுன் 30 | பயிற்சி அமர்வு 2 நெடுவரிசையைப் பார்க்கவும் → | சாசனத் தேதி மற்றும் ஜுன் 30 க்கு இடையில் அங்கீகரிக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சாசனப் பயிற்சி அமர்வில் குறைந்தபட்சம் நான்கு மன்ற அதிகாரிகள் கலந்து கொள்ளும்போது, நடப்பு திட்டஆண்டில் முதல் மற்றும் இரண்டாவது பயிற்சி அமர்வுகளுக்கான புள்ளிகளை மன்றம் பெறுகிறது. |

அனைத்து சாசனப் பயிற்சி வாய்ப்புகளும் திட்டத் தர இயக்குநர் மூலம் திட்டமிடப்பட்டு, அவரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**மன்றங்கள் நேரடியாக உலகத் தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கும் பயிற்சி அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாது**. ஒரு பயிற்சி அமர்வில் கலந்து கொள்ளும் மன்ற அதிகாரிகள், பயிற்சி அமர்வை நடத்தும் நபருக்கு அவர்களின் பெயர்கள், அலுவலகங்கள் மற்றும் மன்ற எண்களை வழங்குவதற்கான பொறுப்பாவார்கள்.

அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகளால் நேரலைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இப்பயிற்சி நேரடியாக அல்லது இணையத்தளம் வழியாக இருக்கலாம். பயிற்சியை மேம்படுத்த ஒலிக்காட்சிக் கருவிகள் பயன்படுத்தப்படலாம், ஆனால் அவை மட்டுமே பயிற்சியின் ஒரே முறையாக இருக்காது. எடுத்துக்காட்டாக, மன்ற அதிகாரிகள் அவர்களின் பொறுப்புகளை விவரிக்கும் காணொளியை மட்டுமே பார்த்திருந்தால், பயிற்சி பெற்றவர்களாகக் கருதப்படுவதில்லை, அது ஒரு மாவட்டத் தலைவரால் முன்பே பதிவுசெய்யப்பட்டு வழங்கப்பட்ட காணொளியாக இருந்தாலும்கூட ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

## நிர்வாகம்

இலக்கு 10 நிர்வாகம் சார்ந்தது. உங்கள் மன்றம் அதன் நிர்வாகக் கடமைகளை சரியான நேரத்தில் நிறைவேற்றும்போது, உறுப்பினர்களும் உங்கள் மன்றமும் ஒட்டுமொத்தமாக தங்களின் சாதனைகளுக்கு அங்கீகாரம் பெறுகின்றனர். கட்டண அமைப்பு மற்றும் கட்டணம் தொடர்பான வழிகாட்டுதல்கள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு **Policy 8.0: Dues and Fees** -ஐப் பார்க்கவும்.

10. ஒரு காலத்திற்கு எட்டு உறுப்பினர்களின் பெயர்களுடன் (அவர்களில் குறைந்தது மூன்று பேர் புதுப்பிக்கும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்) உறுப்பினர் கட்டணத்தைச் சரியான நேரத்தில் செலுத்துதல் மற்றும் ஒரு மன்ற அதிகாரிப் பட்டியலைச் சரியான நேரத்தில் சமர்ப்பித்தல்

இலக்கு 10- இன் உறுப்பினர் கட்டணப் பகுதிக்கு, உங்கள் மன்றம் புள்ளிகளைப் பெறும் நிகழ்வுகளானவை:

- உங்கள் மன்றத்தின் அக்டோபர்-மார்ச் உறுப்பினர் கட்டணம் மற்றும் எட்டு உறுப்பினர்களின் பெயர்கள் (அவர்களில் குறைந்தது மூன்று பேர் புதுப்பிக்கும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்) அக்டோபர் 1 அல்லது அதற்கு முன்னர் உலகத் தலைமையகத்தால் பெறப்படுகிறது.

அல்லது

- உங்கள் மன்றத்தின் ஏப்ரல்-செப்டம்பர் உறுப்பினர் கட்டணம் எட்டு உறுப்பினர்களின் பெயர்களுடன் (அவர்களில் குறைந்தது மூன்று பேர் புதுப்பிக்கும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்) ஏப்ரல் 1 அல்லது அதற்கு முன்னர் உலக தலைமையகத்தால் பெறப்படுகிறது

மன்ற அதிகாரிப் பட்டியல்களைக் குறிக்கும் இலக்கு 10 இன் பகுதிக்கு, சில மன்றங்கள் ஆண்டுதோறும் அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும்போது, குறைந்தது வாரந்தோறும் சந்திக்கும் மன்றங்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தேர்தல்களை நடத்தக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் மன்றம் வருடாந்திர தேர்தல்களை நடத்தினால், வரவிருக்கும் திட்ட ஆண்டிற்கான இலக்கு 10 க்கு புள்ளிகள் பெற ஜூன் 30 அல்லது அதற்கு முன்னர் உங்கள் மன்ற அதிகாரிப் பட்டியலை உலகத் தலைமையகம் பெற வேண்டும். உங்கள் மன்றம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தேர்தல்களை நடத்தினால், உங்கள் மன்ற அதிகாரிப் பட்டியலை முந்தைய Toastmasters ஆண்டின் ஜூன் 30அல்லது அதற்கு முன்னர் மற்றும் / அல்லது தற்போதைய Toastmasters ஆண்டின் டிசம்பர் 31 அன்று உலக தலைமையகம் பெற வேண்டும்.

வருடாந்திர பதவிக் காலங்கள் ஜூலை 1 முதல் ஜூன் 30 வரையாகும். அரை வருட பதவிக்காலங்கள் ஜூலை 1 முதல் டிசம்பர் 31 வரை மற்றும் ஜனவரி 1 முதல் ஜூன் 30 வரை ஆகும். இந்த அட்டவணைக்கு மாறாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் மன்றங்கள் **Club Constitution for Clubs of Toastmasters International** -ஐ மீறி செயல்படுகின்றன, மேலும் மன்ற அதிகாரிப் பட்டியல்களைச் சமர்ப்பிப்பதற்கான மேன்மைமிகு திட்டத்தில் புள்ளிகள் பெற தகுதியற்றவை.

ஜூலை 1 மற்றும் செப்டம்பர் 30 க்கு இடையில் சாசனம் பெறும் புதிய மன்றங்கள் சரியான நேரத்திற்கு அனுப்பப்படும் அதிகாரிப் பட்டியலுக்கு தானாகவே முழு புள்ளிகளைப் பெறுகின்றன, மேலும் இலக்கு 10 ஐ முழுமையாக அடைய புதுப்பிப்பு கட்டணங்களை சரியான நேரத்தில் சமர்ப்பிக்க அக்டோபர் 1 மற்றும் ஏப்ரல் 1 ஆகிய இரண்டு வாய்ப்புகளைக் கொண்டுள்ளன. அக்டோபர் 1 முதல் ஜூன் 30 வரை சாசனம் பெறும் புதிய மன்றங்கள் நடப்பு திட்ட ஆண்டில் இந்த இலக்கிற்கான முழு புள்ளியைப் பெறும். இரண்டு நிகழ்வுகளிலும், சரியான நேரத்தில் சாசன சமர்ப்பிப்பு அதிகாரிப் பட்டியலுக்கான DCP தேவையைப் பூர்த்தி செய்கிறது.

சமீபத்தில் சாசனம் பெற்ற அனைத்து மன்றங்களுக்கும், DCP தேவைகளைத் தவிர்த்து, ஒரு மன்றத்தின் கட்டணம் உலகத் தலைமையகத்தால் பெறப்படும் போது, அந்த மன்றம் கட்டணம் செலுத்தியதாகவும் நன்னிலையில் இருப்பதாகவும் கருதப்படுகிறது என்பதை அறிக. குறைந்தபட்சம் எட்டு உறுப்பினர்களின் கட்டணம் தேவைப்படுகிறது-அவர்களில் குறைந்தது மூன்று பேர் அசல் மன்ற சாசனத்தின் உறுப்பினர்களாக இருந்திருக்க வேண்டும். முதல் புதுப்பிப்புகள் அனைத்து சாசன உறுப்பினர்களுக்கும் சரிசம விகிதப்படுத்தப்படும், மேலும் இதை சாசன மாதத்தைப் பொறுத்து ஏப்ரல் 1 அல்லது அக்டோபர் 1 ஆம் தேதி செலுத்த வேண்டும். மன்ற அதிகாரிகள், சரிசம விகிதப்படுத்தப்பட்ட புதுப்பிப்புகளின் மின்னஞ்சல் நினைவூட்டலைப் பெறுவார்கள். இது மன்றம் கட்டணத்தைச் சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதையும் நன்னிலையில் இருப்பதையும் உறுதிசெய்ய உதவுகிறது.

## அங்கீகாரம்

உங்கள் மன்றம் தகுதிகாண் தேவைகளைப் பூர்த்திசெய்து பின்வருவனவற்றையும் செய்யும்போது, அது ஆண்டு இறுதியில் மேன்மைமிகு மன்ற அங்கீகாரத்திற்கு தகுதியுடையதாகிறது:

| சாதனை | | | |
|---|---|---|---|
| **நிலை** | **மன்ற வெற்றித் திட்டம்** | **ஜூன் 30 ஆம் தேதி நிலவரப்படி உறுப்பினர் சேர்க்கை** | **இலக்குகள்** |
| **மேன்மைமிகு** | செப்டம்பர் 30*க்குள் சமர்ப்பிக்கப்பட்டது | மொத்த உறுப்பினர்கள் 20 அல்லதுநிகர வளர்ச்சி 3** | 5 |
| **தேர்வுறுமேன்மைமிகு** | செப்டம்பர் 30*க்குள் சமர்ப்பிக்கப்பட்டது | மொத்த உறுப்பினர்கள் 20 அல்லதுநிகர வளர்ச்சி 5** | 7 |
| **தலைவரின் மேன்மை மிகு** | செப்டம்பர் 30*க்குள் சமர்ப்பிக்கப்பட்டது | மொத்தம் 20 உறுப்பினர்கள்** | 9 |
| **ஸ்மெட்லி மேன்மைமிகு** | செப்டம்பர் 30*க்குள் சமர்ப்பிக்கப்பட்டது | மொத்தம் 25 உறுப்பினர்கள்** | 10 |

* புதிதாகப் பட்டயம் பெற்ற மன்றங்களுக்கான கடைசி நாள் பட்டயம் பெற்ற தேதியிலிருந்து 90 நாட்கள். ஏப்ரல் 1ஆம் தேதிக்குப் பிறகு பட்டயம் பெறும் மன்றங்கள் தங்கள் பட்டயத் திட்ட ஆண்டுக்கான மன்ற வெற்றித் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்காக தானாகவே நன்மதிப்பைப் பெறும்.

** புதுப்பிக்கிற, இரட்டையான, புதிய, பட்டய மற்றும் மீண்டும் இணைந்த உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை. இந்த மொத்தத்தில் இடம் மாறிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட மாட்டார்கள்.

உங்கள் மன்றம் ஒரு மேன்மைமிகு, தேர்வுறு மேன்மைமிகு, அல்லது தலைவரின் மேன்மைமிகு அல்லது ஸ்மெட்லி மேன்மைமிகு அங்கீகாரம் பெற்றால், உலகத் தலைமையகம் உங்கள் மன்றத்திற்கு, காட்சிப்படுத்துவதற்காக ஒரு விருது ரிப்பன் மற்றும் ஒரு வாழ்த்துக் கடிதத்தை அனுப்பும்.

சில Toastmasters மன்றங்கள் மாவட்டங்களுக்கு உட்பட்டவை அல்ல. உங்கள் மன்றத்தின் நிலை அப்படியென்றால், நான்கு அங்கீகார நிலைகளில் ஒவ்வொன்றிற்கும் மேலே பட்டியலிடப்பட்டதை விட ஒரு இலக்கை குறைவாக அடைவதன் மூலம் அங்கீகாரம் பெறலாம்.

## சொல்லாக்கம் மற்றும் திட்ட விவரக்குறிப்புகள்

### உறுப்பினர்கள் தளம்

Toastmasters ஆண்டின் தொடக்கத்தில் (ஜூலை 1) உங்கள் மன்றத்தின் உறுப்பினர் நிலை கணக்கிடப்படுகிறது. உறுப்பினர் நிலையின் அடிநிலை என்பது முந்தைய Toastmasters ஆண்டின் ஜூன் 30 அன்று மன்றத்தில் இருந்த கட்டணம் செலுத்திய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகும். இந்தக் கட்டணங்கள் புதுப்பிக்கும், புதிய, சாசன, இரட்டை மற்றும் மீண்டும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து வரக்கூடும்.

முந்தைய Toastmasters ஆண்டின் ஜூலை 1 க்குப் பிறகு உலகத் தலைமையகத்தால் பெறப்பட்ட உறுப்பினர்-புதுப்பிப்பு கட்டணத் தொகை உறுப்பினர்கள்நிலை அடிநிலையில் சேர்க்கப்படுகிறது. ஆகையால், முந்தைய Toastmasters ஆண்டிற்கான தாமதமான உறுப்பினர் கட்டணங்கள் பிரதிபலிக்கும் வகையில் ஆண்டின் எந்த நேரத்திலும் உறுப்பினர் நிலையின் அடிநிலை திருத்தப்படலாம்.

ஆண்டு முழுவதும் ஒரு மன்றத்தின் உறுப்பினர் நிலை எவ்வாறு பாதிக்கப்படலாம் என்பதற்கான எடுத்துக்காட்டு பின்வருமாறு:

உதாரணங்கள்:

- ஏப்ரல் மாதத்தில், உங்கள் மன்றம் 17 உறுப்பினர்களுக்கான உறுப்பினர்-புதுப்பித்தல் கட்டணத்தைச் சமர்ப்பிக்கிறது.
- இந்த உறுப்பினர் எண்ணிக்கையை 19 என ஆக்குவதற்கு, ஜூன் மாதத்தில் இரண்டு புதிய உறுப்பினர் விண்ணப்பங்களின் நிலுவைத் தொகை உலகத் தலைமையகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.
- ஜூலை 1 ஆம் தேதி மன்றம் தனது புதிய Toastmasters ஆண்டை 19 உறுப்பினர்களுடன் தொடங்குகிறது. இப்போது அது உறுப்பினர்நிலையின் அடிநிலை ஆகும்.
- ஆகஸ்டு மாதத்தில், மூன்று உறுப்பினர்கள் அவர்களின் ஏப்ரல் மாத புதுப்பித்தல் நிலுவையை, ஐந்து மாதங்கள் தாமதமாகப் பின் தேதியில் செலுத்துகிறார்கள். இந்தப் பணம்செலுத்தல்கள் உறுப்பினர்நிலை அடித்தள எண்ணிக்கையை 22 ஆக உயர்த்தும்.

### ஆண்டு முடிவில் உறுப்பினர்கள்

உலகத் தலைமையகத்திற்கு கட்டணம் செலுத்திய உங்கள் மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள்தான் (புதுப்பிப்பு, இரட்டை, புதிய, சாசனம் மற்றும் மீண்டும் சேர்க்கப்பட்ட) ஆண்டு இறுதியில் உங்கள் மன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை. ஆண்டு இறுதி உறுப்பினர் நிலை எண்ணிக்கைகள் சரிசெய்யப்படாது. ஜூன் 30 க்குப் பிறகு பெறப்பட்ட ஏப்ரல் உறுப்பினர் கட்டணம் ஆண்டு முடிவில் உறுப்பினர் நிலையுடன் சேர்க்கப்படாது. இருப்பினும், இந்தத் தாமதமான உறுப்பினர் கட்டணங்கள் தற்போதைய Toastmasters ஆண்டிற்கான உறுப்பினர் நிலையை அதிகரிக்கும்.

**நிகர வளர்ச்சி**

ஆண்டு இறுதியில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை (மேற்கூறியபடி வரையறுக்கப்படுகிறது) உறுப்பினர் நிலையைத் (மேற்கூறியபடி வரையறுக்கப்படுகிறது) தாண்டும்பொழுது நிகர வளர்ச்சி நிகழ்கிறது.

ஒரு மன்றத்தின் சாதனைகள் மற்றும் உறுப்பினர் நிலை அங்கீகாரம் பெறுவதற்கான தகுதியை எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்கும் எடுத்துக்காட்டுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

| | ஜூலை 1-இல் உறுப்பினர் நிலை | ஜூன் 30 அன்று இன்றைய நாள் உறுப்பினர் | ஜூன் 30-ஆம் தேதியன்று அடையப்பட்ட இலக்குகள் | மன்றம் மேன்மைமிகுவாக ஆக்கப்படுமா? | ஏன்? |
|---|---|---|---|---|---|
| மன்றம் A | 14 | 17 | 5 | ஆம் | ஆண்டின் இறுதியில் மன்றம் 20 உறுப்பினர்களைப் பெற்றிருக்கவில்லை எனறாலும், நிகர வளர்ச்சி மூன்றினைப் பெற்றிருக்கிறது. ஐந்து விருதுகளை ஈட்டி மற்றும் உறுப்பினர்நிலை தகுதியைப் பூர்த்தி செய்திருக்கிறது என்பதன் பொருள், இந்த மன்றம் மேன்மைமிகுவாக அங்கீகரிக்கப்படும் என்பதாகும். |
| மன்றம் B | 24 | 19 | 8 | இல்லை | இந்த மன்றம் ஆண்டின் இறுதியில் நிகர வளர்ச்சிக்கான உறுப்பினர்நிலைத் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை அல்லது 20 உறுப்பினர்களைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் போதுமான இலக்குகளை அடைந்திருந்தாலும்கூட, அந்த மன்றம் மேன்மைமிகுவாக அங்கீகரிக்கப்படாது. |
| மன்றம் C | 19 | 20 | 9 | ஆம் | இந்த மன்றம் ஒன்று என்ற நிகர வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும்கூட, அவர்கள் குறைந்தபட்சத் தகுதிநிலைக்கான 20 உறுப்பினர்களைப் பெற்றிருப்பதைப் பூர்த்திசெய்தார்கள். அவர்கள் ஒன்பது இலக்குகளைப் பெற்றதால், அவர்கள் தலைவரின் மேன்மைமிகுவாக அங்கீகரிக்கப்படுவார்கள். |
| மன்றம் D | 31 | 25 | 10 | ஆம் | இந்த மன்றம் உறுப்பினர்களை இழந்தது ஆனாலும் குறைந்தபட்சம் 25 உறுப்பினர்களைப் பெற்று நிலைநிறுத்திக்கொள்ள முடிந்தது மேலும் தலைவரின் மேன்மைமிகு ஆக அங்கீகாரத்தைப் பெறுவதற்குப் போதுமான இலக்குகளை அடைந்திருந்தது. |

**உலக தலைமையகத்திற்கு தகவலைச் சமர்ப்பித்தல்**

**ஒரு வார இறுதி அல்லது விடுமுறை நாட்களில் காலக்கெடு வந்தாலும் கூட, ஆவணங்கள் உலகத் தலைமையகத்தை, ஜூன் 30 ஆம் தேதி இரவு 11:59 p.m. (வட அமெரிக்க நேரம்) காலக்கெடுவுக்கு முன்னர் அடைய வேண்டும்.** ஆண்டு முழுவதும் உள்ள அனைத்து காலக்கெடுவிற்கும் பொருந்தக்கூடியது போல, சேரும் தேதிகள், அதிகாரி தேர்தல் தேதிகள் மற்றும் விருதுக்கான சமர்ப்பித்தல்கள் போன்றவற்றில் திருத்தங்கள் போன்ற எந்த மாற்றங்களும் ஆவணங்கள் பெறப்பட்ட பிறகு மேற்கொள்ளப்படாது என்ற காரணத்தால், மன்ற அதிகாரிகள் துல்லியமான தகவல்களைச் சமர்ப்பிப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

ஆவணங்கள் அல்லது தகவல்கள் வெற்றிகரமாக அனுப்பப்படுவதை உறுதிப்படுத்துவது ஒரு அனுப்புநராக உங்களின் பொறுப்பாகும் என்பதை அறிந்திருங்கள். Toastmasters International பெறுகின்ற எந்தவொரு தவறான அல்லது முழுமையற்ற ஆவணங்கள் அல்லது தகவல்களுக்கு பொறுப்பாகாது. காலக்கெடு தேதியில் ஆவணங்களை அல்லது தகவல்களைச் சமர்ப்பிப்பதில் உங்கள் மன்றத்திற்கு சிக்கல் இருந்தால், மின்னஞ்சல் அல்லது தொலைபேசி போன்ற மாற்று சமர்ப்பிக்கும் முறைகள் உள்ளன. பொருத்தமான தொடர்பு விவரங்கள் மற்றும் நாங்கள் செயல்படும் நேரம் பற்றிய விவரங்களுக்கு **Contact Us** பக்கத்தைப் பயன்படுத்துங்கள்.

## புதிதாக சாசனம் செய்யப்பட்ட மன்றங்கள்

தற்போதைய மேன்மைமிகு மன்ற திட்ட ஆண்டில், புதிதாக சாசனம் செய்யப்பட்ட மன்றங்களுக்கு அறிக்கை நோக்கங்களுக்காக குறைந்தபட்சம் 20 உறுப்பினர் தளம் ஒதுக்கப்படும். 20 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் சாசனம் வழங்கப்பட்ட மன்றங்களுக்கு, அறிக்கைகள் உண்மையான கட்டணம் செலுத்தும் உறுப்பினர்நிலை எண்ணிக்கையை அடிநிலையாகப் பிரதிபலிக்கும் - தயவுசெய்து கவனிக்கவும்: இடமாறிய கௌரவ உறுப்பினர்கள் கணக்கிடப்பட மாட்டார்கள். கூடுதலாக, புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட மன்றங்களுக்கு, மன்ற வெற்றித் திட்டத்திற்கான காலக்கெடு, பட்டயத் தேதிக்குப் பிறகு 90 நாட்கள் ஆகும். ஏப்ரல் 1 ஆம் தேதிக்குப் பிறகு சாசனம் செய்யும் மன்றங்கள், அந்த நிகழ்ச்சி ஆண்டுக்கான மன்ற வெற்றித் திட்டத்தைச் சமர்ப்பித்ததற்கான பெருமையைத தானாகவே பெறும்.பிரதிபலிக்கும்.

## அறிக்கைகள்

எந்த ஒரு அங்கீகாரத் திட்டத்திலும் வழக்கமான பின்னூட்டம் ஒரு முக்கியப் பகுதியாகும். நீங்கள் அங்கீகாரத்தை நோக்கிச் செல்லும்போது, உங்கள் தற்போதைய முன்னேற்றத்தை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு இணையவழி அறிக்கை உங்கள் மன்றத்தின் உறுப்பினர் தளம், தற்போதைய உறுப்பினர்கள் மற்றும் 10 இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தைக் காட்டுகிறது. புதுப்பிப்புகள் Toastmasters சர்வதேச இணையதளத்தில் **dashboards.toastmasters.org.** இல் தினமும் கிடைக்கும். ஒவ்வொரு மாதத்தின் தொடக்கத்திலும், உலகத் தலைமையகம் முந்தைய மாதத்தின் செயலாக்கத்தை முடிக்கும்போது, டாஷ்போர்டுகள் முந்தைய மாதத்தின் வணிகத்தைப் பிரதிபலிக்கும். எங்கள் மாத முடிவின் இறுதித் தேதிகளை **toastmasters.org/MonthEnd** இல் காணலாம்

## மன்ற வெற்றித் திட்டம்

ஏழு அதிகாரிகளும் சென்ற ஆண்டின் தலைவரும் அடங்கிய மன்றச் செயற்குழு, மன்ற உறுப்பினர்களின் தேவைகள் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் ஒரு **மன்ற வெற்றித் திட்டத்தை** உருவாக்குகிறது. முதலாவதாக, மன்ற அதிகாரிகள் அவர்கள் எவ்வாறு தொடர்பாடுவது, முரண்பாட்டை எதிர்கொள்வது மற்றும் பொறுப்பேற்பது என்பதைத் தீர்மானிக்கிறார்கள். இரண்டாவதாக, மன்ற அதிகாரிகள் தற்போதைய சூழ்நிலைகளை மதிப்பீடு செய்கிறார்கள், குறிப்பிட்ட இலக்குகளை நிறுவுகிறார்கள், வெற்றியை அடைய பயன்படுத்தக்கூடிய உத்திகளை உருவாக்குகிறார்கள். அந்த முயற்சியில் மன்ற அதிகாரிகளுக்கு உதவ, இந்தத் திட்டம் பயன்படுத்தக்கூடிய பயனுள்ள ஆதாரங்களை அடையாளம் காட்டுகிறது. இறுதியாக, திட்டமானது மன்ற அதிகாரிகளுக்கு பணிகளை அடையாளம் காணவும், ஒரு கால அட்டவணையை உருவாக்கவும், சாதனைகளை கண்காணிக்கவும் அழைப்பு விடுகிறது.

மன்றத்திற்கான அங்கீகாரத்தை ஈட்ட, பொதுவான இலக்கிற்காக அர்ப்பணித்துக்கொண்ட, ஒரு திட்டத்தை வகுத்து அதைச் சிறப்பாக செயல்படுத்துகின்ற மக்களின் குழு தேவைப்படுகிறது. அவர்கள் தங்கள் பணிகளுக்கான பொறுப்பைப் பகிர்ந்து கொள்கிறார்கள், அவற்றை அடைய ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கிறார்கள். இந்தக் குழுக்கள் மன்ற அதிகாரிகளை உள்ளடக்கியது மட்டுமல்ல; மன்ற வெற்றித் திட்டத்தின் குறிப்பிட்ட அம்சங்களை நிறைவேற்ற உதவும் பிற குழுக்களையும் மன்றங்கள் உருவாக்கலாம்.

இந்த ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டுகளில் மன்றம் என்ன சாதிக்கும் என்பதை மன்றச் செயற்குழு தீர்மானிக்கிறது. தொலைநோக்குப் பார்வை அடையக்கூடிய மற்றும் ஊக்கமளிக்கும் வகையில் இருக்க வேண்டும், இதன்மூலம் மற்ற மன்ற உறுப்பினர்கள் இதில் ஈடுபடவும் குழுவின் முயற்சிகளுக்கு உதவவும் தூண்டப்படுகிறார்கள்.

தொலைநோக்குப் பார்வை பதிவு செய்யப்பட்டதும், ஒவ்வொரு உறுப்பினரின் பங்குகளையும் பொறுப்புகளையும் யார் ஏற்பார்கள் என்பதை மன்ற அதிகாரிகள் தீர்மானிக்கிறார்கள். சில உறுப்பினர்களின் திறமையும் தனிமனிதச் செயல்திறமும் சில பணிகளுக்கு மிகவும் பொருத்தமானதா? இது போன்ற கேள்விகளை மதிப்பிடுவதன் மூலம், மன்ற அதிகாரிகள் மிகவும் பொருத்தமான உறுப்பினர்களுக்கு பணிகளைக் கொடுக்கமுடியும்.

மன்ற வெற்றித் திட்டத்தில் உங்கள் மன்றத்தின் இலக்குகளை அடையத் தேவையான அனைத்து கூறுகளும் உள்ளன: எப்போது, எப்படி, யார் செய்ய வேண்டும், எப்போது, எப்படி நிறைவேற்ற வேண்டும், அதைச் செய்வதற்கு யார் பொறுப்பு என்பதை முன்கூட்டியே தீர்மானிப்பது வெற்றியை அடைவதை மிகவும் எளிதாக்குகிறது. அதற்காக, மன்றச் செயற்குழு பின்வரும் நிரலுடன் பதவிக் காலத்தைத் தொடங்க வேண்டும்:


1. தனிச்சிறப்புடைய இலக்குகளை அமைக்கவும்.
2. அந்த இலக்குகளை அடைய உத்திகளை வகுக்கவும்.
3. திட்டத்தை நிறைவேற்றவும் முடிவுகளை உண்டாக்கவும் ஒரு கட்டமைப்பை உருவாக்குங்கள்.

மன்ற அதிகாரிகள் இணையவழி அறிக்கைகளை மதிப்பாய்வு செய்து, மன்ற வெற்றித் திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஒழுங்காகச் சந்திக்கிறார்கள், பின்னர் அவர்கள் தேவைக்கேற்ப மாற்றங்களைச் செய்கிறார்கள். மன்ற வெற்றித் திட்டத்தை **Club Central**-இல் முடிக்க வேண்டும், இதனால் அனைத்து அதிகாரிகளும் எந்த நேரத்திலும் அதை அணுக முடியும். மன்றச் செயற்குழுவினரிடையே நல்ல தொடர்பாடல் முக்கியமானது.

ஓராண்டுக்கு நோக்கெல்லைக்கு வெளியே உள்ள இலக்குகளை அடைவதற்கு, வெளியேறும் மன்ற அதிகாரிகள் **Club Central**-இல் மன்ற வெற்றித் திட்டத்தை நிறைவுசெய்ய வேண்டும், இதனால் அது ஆண்டு இறுதியில் உள்வரும் அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளமுடியும். இந்த வழியில், மன்ற அதிகாரிகளின் ஒவ்வொரு புதிய குழுவும் முந்தைய காலத்தில் அடைந்த வெற்றிகளைக் கட்டமைக்க முடியும்.

# மாவட்ட அங்கீகாரத் திட்டம்

மேன்மைமிகு திட்டம் மாவட்ட அங்கீகாரத் திட்டத்தின் தொடக்கப் புள்ளியாக செயல்படுகிறது, இது மேன்மைமிகு வட்ட, கோட்ட மற்றும் மாவட்டத் திட்டங்களை உள்ளடக்கியது. இதன் பொருளாவது, இந்த மன்றங்களின் வெற்றி வட்டங்கள், கோட்டங்கள் மற்றும் மாவட்டங்களின் வெற்றிக்கு முக்கியமானது. கீழேயுள்ள விளக்கப்படம் மன்றம், வட்டம், கோட்டம் மற்றும் மாவட்டத்திற்கு இடையிலான உறவை விளக்குகிறது:



## பகுதி இயக்குனரின் மன்ற வருகைகள்

பகுதி இயக்குனர், குறிப்பாக, உங்கள் மன்றத்திற்கும் மாவட்டத்திற்கும் இடையில் ஒரு தொடர்பாளராக பணியாற்றுகிறார். ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை, பகுதி இயக்குனர் உங்கள் மன்றத்திற்கு வருகை புரிகிறார். இந்த வருகைகளின் போது அவர்கள் உங்கள் **மன்ற வெற்றித் திட்டத்தை** மதிப்பாய்வு செய்யக் கேட்கக் கூடும். திட்டத்தையும் அதில் உங்கள் மன்றத்தின் முன்னேற்றத்தையும் காட்டவும் விவாதிக்கவும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும். பகுதி இயக்குநர் உங்கள் மன்றத்திற்கு மாவட்ட ஆதரவுடன் உதவ முடியும் அல்லது உங்கள் கூட்டங்களில் **உண்மையின் தருணங்கள்h**-ஐ இணைப்பதற்கான மதிப்புமிக்க உதவிக்குறிப்புகளை வைத்திருக்கலாம்.

### மன்ற வளங்கள்

உறுப்பினர் விண்ணப்பம்

*உண்மையின் தருணங்கள்*

பிராண்டு இணையவாசல்

*Master Your Meetings*

*Put on a Good Show*

*Finding New Members for Your Club*

மாவட்ட வலைத்தளங்கள்

*Toastmaster* இதழ்

Open House PowerPoint

பொது நிகழ்ச்சி புதிய வெளியீடு வார்ப்புரு

வலைத்தள டெம்ப்ளேட்கள்

மன்றக் கூட்ட அழைப்புகள்

*Let the World Know: Publicity and Promotion*

# மேன்மைமிகு மன்றத் திட்ட இலக்குகள்

Toastmasters திட்ட வருடம்: ____________________

## தகுதிகாண் தேவைகள்

1. **Policy 2.0: Club and Membership Eligibility, Section 4: Good Standing of Clubs**-இன்படி ஒரு மன்றம் நல்ல நிலையில் இருக்க வேண்டும்.

2. ஜூன் 30 ஆம் தேதி நிலவரப்படி ஒரு மன்றத்தில் 20 உறுப்பினர்கள் அல்லது உறுப்பினர்களின் நிகர வளர்ச்சி குறைந்தது மூன்று புதிய, இருமடங்கு அல்லது மீண்டும் சேர்க்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும்.

3. மன்ற வெற்றித் திட்டத்தை செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் மன்றம்சமர்ப்பிக்க வேண்டும்.

## மேன்மைமிகு மன்றத் திட்ட இலக்குகள்

### கல்வி

1. நான்கு நிலை 1 விருதுகள் அடையப்பட்டன
2. இரண்டு நிலை 2 விருதுகள் அடையப்பட்டன
3. மேலும் இரண்டு நிலை 2 விருதுகள் அடையப்பட்டன
4. இரண்டு நிலை 3 விருதுகள் அடையப்பட்டன
5. நிலை 4 பாதை நிறைவு ஒன்று அல்லது DTM விருது அடையப்பட்டது
6. மேலும் ஒரு நிலை 4 பாதை நிறைவுறுதல் விருது அல்லது DTM விருது அடையப்பட்டன

### உறுப்பினர்நிலை

7. நான்கு புதிய, இரட்டை அல்லது மீண்டும் சேர்க்கப்பட்ட
8. மேலும் நான்கு புதிய, இரட்டை அல்லது மீண்டும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள்

### பயிற்சி

9. இரண்டு பயிற்சி காலங்களிலும் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் நான்கு மன்ற அதிகாரிகள் பயிற்சி பெறுகின்றனர்.

### நிர்வாகம்

10. ஒரு காலத்திற்கு எட்டு உறுப்பினர்களின் பெயர்களுடன் (அவர்களில் குறைந்தது மூன்று பேர் புதுப்பிக்கும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்) உறுப்பினர் கட்டணத்தைச் சரியான நேரத்தில் செலுத்துதல் மற்றும் ஒரு மன்ற அதிகாரிப் பட்டியலைச் சரியான நேரத்தில் சமர்ப்பித்தல்

## அங்கீகாரம்

உங்கள் மன்றம் அனைத்துத் **தகுதிகாண் தேவைகளை**ப் பூர்த்திசெய்து பின்வருவனவற்றில் ஒன்றைப் பெற்றால், அது ஆண்டு இறுதியில் மேன்மைமிகு மன்ற அங்கீகாரத்திற்கு தகுதியுடையதாகிறது:

| **சாதனை** | | | |
|---|---|---|---|
| **நிலை** | **மன்ற வெற்றித் திட்டம்** | **ஜூன் 30 ஆம் தேதி நிலவரப்படி உறுப்பினர் சேர்க்கை** | **இலக்குகள்** |
| **மேன்மைமிகு** | செப்டம்பர் 30*க்குள் சமர்ப்பிக்கப்பட்டது | மொத்த உறுப்பினர்கள் 20 அல்லதுநிகர வளர்ச்சி 3** | 5 |
| **தேர்வுறுமேன்மைமிகு** | செப்டம்பர் 30*க்குள் சமர்ப்பிக்கப்பட்டது | மொத்த உறுப்பினர்கள் 20 அல்லதுநிகர வளர்ச்சி 5** | 7 |
| **தலைவரின் மேன்மை மிகு** | செப்டம்பர் 30*க்குள் சமர்ப்பிக்கப்பட்டது | மொத்தம் 20 உறுப்பினர்கள்** | 9 |
| **ஸ்மிடெலி மேன்மைமிகு** | செப்டம்பர் 30*க்குள் சமர்ப்பிக்கப்பட்டது | மொத்தம் 25 உறுப்பினர்கள்** | 10 |

* புதிதாகப் பட்டயம் பெற்ற மன்றங்களுக்கான கடைசி நாள் பட்டயம் பெற்ற தேதியிலிருந்து 90 நாட்கள். ஏப்ரல் 1ஆம் தேதிக்குப் பிறகு பட்டயம் பெறும் மன்றங்கள் தங்கள் பட்டயத் திட்ட ஆண்டுக்கான மன்ற வெற்றித் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்காக தானாகவே நன்மதிப்பைப் பெறும்.

** புதுப்பிக்கிற, இரட்டையான, புதிய, பட்டய மற்றும் மீண்டும் இணைந்த உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை. இந்த மொத்தத்தில் இடம் மாறிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட மாட்டார்கள்.

உங்கள் முன்னேற்றத்தை **dashboards.toastmasters.org** இல் சரிபார்க்கவும்.

**toastmasters.org**